முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை - 2017 யூலை

## (AA11) நிதிக் கணக்கீட்டு அடிப்படைகள்

(Financial Accounting Basics)

2017-07-22
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *விடைகள் உமக்கு வழங்கப்படும் விடைப்புத்தகத்தில் நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருந்தால், அவற்றைத் தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள் மாத்திரம் அனுமதிக்கப்படும்.*

(6) ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின் வரைவிலக்கணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கப் பரீட்சை வினாக்கள் (OTQ's) தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு வினா* ***வினைச் சொல்லினைக்*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினா வினைச் சொற்களின் நிரலில் தரப்பட்டுள்ள* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பிரிவு A</u>

### நோக்கப் பரீட்சை வினாக்கள் (OTQs)

இந்தப் பிரிவிலுள்ள பதினாறு (16) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

***1.1*** *முதல்* ***1.8*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்க. உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கங்களை வினா ஒழுங்கில் (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றுள் நிதியறிக்கையிடல் கோட்பாட்டு வேலைச் சட்டகத்தின்படி நிதித் தகவல்களின் தர ரீதியான குணாம்சம் எது?

(1) அட்டுறு அடிப்படை (2) தொடர்புடைமை (Relevance)

(3) தொடர்ந்தியங்கும் தாபனம் (Going concern) (4) வரலாற்றுக் கிரயம் (02 புள்ளிகள்)

**1.2** கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக **கபில மோட்டர்ஸ்** இன் ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன :

| விபரம் | ரூ. |
|---|---|
| 2016.04.01 இல் நிகரச் சொத்துக்கள் | 325,000 |
| 2017.03.31 இல் நிகரச் சொத்துக்கள் | 385,000 |
| ஆண்டின்போது எடுப்பனவு | 35,000 |
| ஆண்டின்போது உள்ளிட்ட மேலதிக மூலதனம் | 10,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்):

(1) (ரூ.105,000). (2) (ரூ.35,000). (3) ரூ.85,000/-. (4) ரூ.15,000/-.
(02 புள்ளிகள்)

**1.3** கீழ்வருவனவற்றுள் நிதிக் கூற்றுக்களின் பூரணமான தொடையொன்றின் கூறு எது?

(1) நிதிநிலைக் கூற்று (2) காசுப்பாய்வுக் கூற்று

(3) உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (4) மேலே தரப்பட்டவை எல்லாம்

(02 புள்ளிகள்)

**1.4** **ஆன்** என்பவரிடமிருந்து கடன் அடிப்படையில் பொருட்களைக் கொள்வனவு செய்த **சில்வா** பின்னர் அதன் ஒரு பகுதியை பாதிப்படைந்ததன் காரணமாக **ஆனுக்கு** திருப்பி அனுப்பினார். திருப்பியனுப்பிய அந்தப் பொருட்களைப் பதிவுசெய்வதற்கு **சில்வாவினால்** வழங்கப்படும் ஆவணம் எது?

(1) வரவுப் பதிவுக் குறிப்பு (Debit Note)

(2) செலவுப் பதிவுக் குறிப்பு (Credit Note)

(3) நாட்குறிப்புப் பதிவுச் சான்றுப் பத்திரம் (Journal Voucher)

(4) கொள்வனவுப் பட்டியல் (Purchase Invoice) (02 புள்ளிகள்)

**1.5** எதிர்வுகூறக்கூடிய எதிர்காலம் வரையில் வியாபாரம் அதன் தொழிற்பாட்டினைத் தொடரும் எனும் எடுகோளின் அடிப்படையிலமைந்த கணக்கீட்டுக் கோட்பாடு எது?

(1) கணக்கீட்டுக் காலக் கோட்பாடு (2) கொள்கை மாறாக் கோட்பாடு

(3) தொடர்ந்தியங்கும் தாபனக் கோட்பாடு (4) தேறுகைக் கோட்பாடு (02 புள்ளிகள்)

**1.6** வியாபாரமொன்றின் ஆரம்பத் தொக்கு மீதி ரூ.25,000/- இனால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ள அதே வேளை இறுதித் தொக்கு மீதி ரூ.30,000/- இனால் மிகைப்படுத்தி மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் தாக்கம்:

(1) மொத்த இலாபம் ரூ.55,000/- இனால் மிகைப்படுத்திக் கூறப்படுதல்

(2) மொத்த இலாபம் ரூ.55,000/- இனால் குறைத்துக் கூறப்படுதல்

(3) மொத்த இலாபம் ரூ.5,000/- இனால் மிகைப்படுத்திக் கூறப்படுதல்

(4) மொத்த இலாபம் ரூ.5,000/- இனால் குறைத்துக் கூறப்படுதல் (02 புள்ளிகள்)

**1.7** கீழ்வருவனவற்றுள் "பொதுவான கணக்கீட்டு மென்பொருள்" பொதிக்கு (General Accounting software package) உதாரணம் **அல்லாதது** எது?

(1) சம்பளப் பட்டியல் முறைமை (2) MYOB.

(3) ACCPAC. (4) Tally. (02 புள்ளிகள்)

**1.8** வங்கியொன்றில் பெறப்பட்ட குறுங்காலக் கடனொன்றின் தீர்ப்பனவு, வியாபாரமொன்றுக்கு கீழ்வருவனவற்றில் எதனை விளைவிக்கும்?

(1) சொத்தில் அதிகரிப்பும் மூலதனத்தில் அதிகரிப்பும்

(2) சொத்தில் வீழ்ச்சியும் பரிப்பில் அதிகரிப்பும்

(3) சொத்தில் அதிகரிப்பும் பரிப்பில் அதிகரிப்பும்

(4) சொத்தில் வீழ்ச்சியும் பரிப்பில் வீழ்ச்சியும் (02 புள்ளிகள்)

***1.9*** முதல் ***1.16*** வரையான வினாக்களுக்கு உரிய விடைகளை, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குமுறையாக (ஒன்றன் கீழ் ஒன்றாக) எழுதி அந்த இலக்கங்களுக்கு எதிரே எழுதுக.

**1.9** நிதித் தகவல்களின் இரண்டு (02) பயன்பாட்டாளர்களை (Users) கூறுக. (02 புள்ளிகள்)

**1.10** பொருட்பெறுகைக் குறிப்பில் (GRN) உட்படுத்தப்படும் இரண்டு (02) முக்கியமான விடயங்களைக் கூறுக. (02 புள்ளிகள்)

**1.11** கணினிமயப்படுத்திய கணக்கீட்டு முறைமையொன்றின் பிரதிகூலங்கள் இரண்டு (02) கூறுக. (02 புள்ளிகள்)

**1.12** கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான கணக்கீட்டுக் கோட்பாட்டினைக் கூறுக:

**(a)** உரிமையாளர் எடுத்துக்கொண்ட ரூ.5,000/- இனை எடுப்பனவாகப் பதிவுசெய்தல்

**(b)** எந்திரத்தினை அதன் எதிர்பார்க்கும் பயன்தரும் ஆயுட்கால அடிப்படையில் தேய்மானம் செய்தல்

**(c)** கடன்பட்டோரிடமிருந்து வருமதிகளுக்காக ரூ.5,000/- ஐ ஐயக்கடன் ஏற்பாடு செய்வதற்குத் தீர்மானித்தல் (03 புள்ளிகள்)

**1.13** கீழே தரப்பட்டுள்ள ஊடுசெயல்கள் ***சரத் டிரேடர்ஸ்*** தொடர்புபட்டவையாகும். இந்த ஒவ்வொரு ஊடுசெயலையும் பதிவுசெய்வதற்குத் தேவையான உரிய முதன்மைப் பதிவேட்டினை இனங்காண்க:

**(a)** கடன் அடிப்படையில் ***"HH றிரெயிலர்ஸ்"***க்கு ரூ.8,000/- க்கு சீனி விற்பனை செய்தல்

**(b)** அலுவலகப் பாவனைக்காக தளபாடங்கள் ரூ.175,000/- க்கு கொள்வனவு செய்தல்

**(c)** ***HH றிரெயிலர்ஸினால்*** ரூ.1,700/- பெறுமதியான சீனி திருப்பி அனுப்பப்படல் (03 புள்ளிகள்)

**1.14** ***சமந்தா புத்தகசாலை*** 2016 ஏப்ரல் 01 இல் புகைப்படப் பிரதி எந்திரமொன்றினை ரூ.600,000/- க்கு கொள்வனவு செய்தது. இந்த எந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகவும் ஆயுட்கால முடிவில் ஒடிவுப் பெறுமதி ரூ.100,000/- ஆகவும் மதிப்பிடப்பட்டது. புத்தகசாலையின் கொள்கை நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் தேய்மான ஏற்பாடு செய்வதாகும்.

2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தேய்மானத்தினைக் கணிக்குக. (03 புள்ளிகள்)

**1.15** கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் ***சரியானதா*** அல்லது ***தவறானதா*** எனக்கூறுக. விடைப்புத்தகத்தில் உரிய வினாவின் ஆங்கில எழுத்தினை எழுதி அவற்றிற்கு எதிரே ***சரி*** அல்லது ***தவறு*** என எழுதுக.

**(a)** செலவுகளும் வருமானமும் நிதிநிலைக் கூற்றுடன் நேரடியாகத் தொடர்புபட்ட மூலகங்களாகும்.

**(b)** உரிமையாண்மை என்பது உரிமத்தின் சகல பரிப்புகளையும் கழித்த பின்னர் அதன் சொத்துக்களில் இறுதி நாட்டமாகும் (residual interest).

**(c)** கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்றில் ஊடுசெயற் கோப்புகள் (transaction files) மூல ஆவணங்களிலுள்ள தரவுகளைத் தொகுத்து வழங்குகின்றது. (03 புள்ளிகள்)

**1.16** தனியுரிமையாளர் வியாபாரமான **SS *டிரேடிங்கின்*** கீழ்வரும் ஊடுசெயல்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான இரட்டைப் பதிவுகளை எழுதுக :

**(a)** உரிமையாளர் மேலதிக மூலதனமாக ரூ.800,000/- காசினை வியாபாரத்தில் முதலிட்டுள்ளார்.

**(b)** ஒரு வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூ.50,000/- இன் பூரண தீர்ப்பனவாக ரூ.45,000/- காசாகப் பெறப்பட்டது.

**(c)** வங்கிக் கணக்கிற்கு வட்டி வருமானமாக ரூ.10,000/- பெறப்பட்டது. (06 புள்ளிகள்)

*பிரிவு A முடிவு*

# பிரிவு B

இந்தப் பிரிவிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 02

(a) கீழே தரப்பட்டுள்ள ஊடுசெயல்கள் 2017 சனவரி முதலாம் வாரத்தில் **நாலக புத்தகசாலை** மேற்கொண்ட கடன் கொள்வனவுகளாகும்.

| இல. | திகதி | பட்டியல் இல. | வழங்குநர் | உருப்படி விபரம் | | | வியாபாரக் கழிவு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | விபரம் | கணியம் (அலகுகள்) | அலகு விலை (ரூ.) | |
| 1 | 01.01.2017 | 101 | **சுனிமல்** | அப்பியாசப் புத்தகங்கள் | 100 | 90 | 2% |
| 2 | 04.01.2017 | 303 | **அமால்** | நிறப் பென்சில் பெட்டிகள் | 25 | 180 | - |
| 3 | 06.01.2017 | 14 | **நாமல்** | பென்சில்கள் | 75 | 15 | - |

**நீங்கள் செய்யவேண்டியது:**

2017 சனவரி 01 ஆம் வாரத்திற்கான **நாலக புத்தகசாலையின்** கொள்வனவு நாளேட்டினைத் **தயாரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) கீழே தரப்பட்டுள்ள ஊடுசெயல்கள் தனியுரிமையாளரான **றோஸ்** என்பவரின் கணக்கேடுகளிலிருந்து 2017 மார்ச் மாதத்திற்காகப் பிரித்தறியப்பட்டன :

| திகதி | ஊடுசெயல் |
|---|---|
| 01.03.2017 | **றோஸ்** பணமாக ரூ.500,000/- முதலீடு செய்து வியாபாரத்தை ஆரம்பித்தார். |
| 05.03.2017 | மீள்விற்பனைக்காக ரூ.750,000/- க்கு பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. |
| 15.03.2017 | ரூ.300,000/- கிரயமான தொக்குகள் கிரயத்தில் 10% இலாபம் வைத்து காசுக்கு விற்பனை செய்யப்பட்டது. |
| 20.03.2017 | வழங்குநருக்கு ரூ.200,000/- செலுத்தப்பட்டது. |
| 25.03.2017 | 2017 மார்ச் மாத மின்கட்டணம் ரூ.10,000/- செலுத்தப்பட்டது. |
| 31.03.2017 | அலுவலகப் பாவனைக்காக கடன் அடிப்படையில் ரூ.100,000/- க்கு கணினியொன்று கொள்வனவு செய்யப்பட்டது. |

**நீங்கள் செய்யவேண்டியது :**

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஊடுசெயல்களின் தாக்கத்தினையும் **பதிவுசெய்க** :

[நடைமுறையல்லாச் சொத்து *(நிலையான சொத்து) + தொக்குகள் + கடன்பட்டோர் + காசு = உரிமையாண்மை + பரிப்புகள்]*

(06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**NYK டிரேடர்ஸின்** புதிதாக நியமனம் பெற்ற **அமாலி** 2017 மார்ச் 31 இல் தயாரித்த பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் தொங்கற் கணக்கிற்கு மாற்றப்பட்டு வரைபு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. வரைபு நிதிக் கூற்றுக்களின்படி 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் ரூ.175,000/-.

பின்னர் கீழ்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன :

(1) ரூ.60,000/- க்கான கடன் கொள்வனவு, கொள்வனவுக் கணக்கில் ரூ.6,000/- ஆக வரவுப்பதிவு செய்யப்பட்டபோதிலும் செலவுப்பதிவு சரியாக மேற்கொள்ளப்பட்டது.

(2) தொலைபேசிச் செலவு ரூ.1,200/- மின்சாரச் செலவுக் கணக்கில் ரூ.2,100/- ஆகப் பதிவுசெய்யப் பட்டபோதிலும் காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டது.

(3) காசேட்டில் பதிவுசெய்யப்பட்ட காகிதாதிகள் செலவு ரூ.750/- காகிதாதிகள் செலவுக் கணக்கில் பதிவுசெய்யப்படவில்லை.

(4) ரூ.25,000/- க்கான கடன் விற்பனையானது வியாபாரக் கடன்பட்டோர் கணக்கு மற்றும் விற்பனைக் கணக்குகளில் இரு தடவை பதிவுசெய்யப்பட்டது.

(5) வட்டிச் செலவு ரூ.5,000/- காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டபோதிலும் வட்டி வருமானக் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கு நாட்குறிப்புப் பதிவுகளைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **NYK டிரேடர்ஸின்** 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான செம்மையாக்கம் செய்யப்பட்ட இலாபத்தினை (நட்டத்தினை) **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

***பிரதீப்*** எனும் தனியுரிமையாளர் ***''பிரதீப் என்டபிரைசஸ்''*** எனும் வியாபாரத்தினை நடாத்துகிறார். ***பிரதீப் என்டபிரைசஸின்*** 2016 மார்ச் 31 ஆந் திகதியில் நிதிநிலைக்கூற்று கீழ்வருமாறு :

**பிரதீப் என்டபிரைசஸ்**
**2016 மார்ச் 31 இல் நிதிநிலைக் கூற்று**

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்:** | | |
| அலுவலக உபகரணங்கள் | | 400,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| வியாபாரக் கடன்பட்டோர் | 250,000 | |
| காசு | 50,000 | 300,000 |
| | | **700,000** |
| | | |
| **மூலதனம்** | | 500,000 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்:** | | |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | | 200,000 |
| | | **700,000** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2016 மார்ச் 31 இல் ரூ.400,000/- அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அவை கிரயத்தில் ஆண்டுக்கு 10% இல் நேர்கோட்டு முறையில் தேய்மானம் செய்யப்படும்.

(2) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் கீழ்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| விற்பனைகள் | 900,000 |
| கொள்வனவுகள் | 650,000 |

சகல கொள்வனவுகளும் விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

(3) 2017 மார்ச் 31 இல் தொக்குகள் எதுவும் இருக்கவில்லை.

(4) 2017 மார்ச் 31 இல் வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதிகள் கீழ்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 100,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 170,000 |

(5) 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூ.200,000/- வங்கிக் கடன் ஆண்டிற்கு 10% நிலையான வட்டிக்குப் பெறப்பட்டது. இது சமமான இரு வருடாந்த தவணைக் கட்டணங்களில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். 2017 மார்ச் 31 ஆந் திகதி செலுத்தப்பட வேண்டிய வட்டியுடனான முதலாவது வருடாந்தத் தவணைக் கட்டணம் 2017 ஏப்ரல் 10 ஆந் திகதி செலுத்தப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2017 மார்ச் 31 ஆந் திகதி **பிரதீப் எண்டபிரைசஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 05

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக கிளாஸ் போத்தல் மனுபக்சரர்ஸின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன :

| | ரூ. |
|---|---|
| மூலப்பொருட்கள் கொள்வனவு | 1,750,000 |
| சம்பளம் – உற்பத்தி முகாமையாளர் | 250,000 |
| உள்வண்டிக்கூலி – மூலப்பொருட்கள் | 300,000 |
| நேர் கூலி – உற்பத்தித் தொழிலாளர்கள் | 950,000 |
| கட்டட வாடகை | 250,000 |
| தொழிற்சாலை எந்திரத் தேய்மானம் | 300,000 |
| பாதுகாப்புச் செலவுகள் | 120,000 |
| மின்சாரச் செலவுகள் | 275,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் கிடைக்கப்பெற்றுள்ளன :

(1) தொக்குகள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டன :

| | **2016 ஏப்ரல் 01 இல் (ரூ.)** | **2017 மார்ச் 31 இல் (ரூ.)** |
|---|---|---|
| மூலப்பொருட்கள் | 2,300,000 | 1,800,000 |
| புத்துருவாகும் வேலை (மொத்த உற்பத்திக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 1,050,000 | 710,000 |

(2) கீழே தரப்பட்டுள்ள செலவுகள் பின்வருமாறு பகிரப்பட வேண்டும் :

| | **தொழிற்சாலை** | **அலுவலகம்** |
|---|---|---|
| கட்டட வாடகை | 80% | 20% |
| பாதுகாப்புச் செலவுகள் | 75% | 25% |
| மின்சாரச் செலவுகள் | 80% | 20% |

(3) நேர் கூலிக்கு மேலதிகமாக உற்பத்தித் தொழிலாளர்கள் ஆண்டின்போது உற்பத்தி செய்யப்படும் போத்தல்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ.10/- வீதம் ஊக்குவிப்புத் தொகை பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். இந்த ஆண்டின்போது உற்பத்தி செய்யப்பட்ட போத்தல்களின் எண்ணிக்கை 8,000 ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

(a) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உற்ப்ததிக் கணக்கினைத் **தயாரிக்குக.** (08 புள்ளிகள்)

(b) போத்தலொன்றின் உற்பத்திக் கிரயத்தைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பிரிவு B முடிவு*

## பிரிவு C

இந்தப் பிரிவிலுள்ள ஒரே (01) வினாவுக்கு விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

**NN டிரேடர்ஸ்** *என்பது* **நிஷாந்தவுக்கு** *சொந்தமான தனியுரிமையாளர் வியாபாரமாகும்.* 2017 *மார்ச்* 31 *இல்* **NN டிரேடர்ஸின்** *பரீட்சை மீதி கீழ்வருமாறு :*

**NN டிரேடர்ஸ்**

**2017 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்): | | |
| காணியும் கட்டடமும் | 10,000 | |
| அலுவலக உபகரணம் | 6,500 | |
| தளபாட இணைப்புகள் | 5,000 | |
| திரள் தேய்மானம் - 2016 ஏப்ரல் 01 இல்: | | |
| கட்டடம் | | 2,600 |
| அலுவலக உபகரணம் | | 1,500 |
| தளபாட இணைப்புகள் | | 2,500 |
| தொக்குகள் 2016 ஏப்ரல் 01 இல் | 2,800 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 18,500 | 16,600 |
| எடுப்பனவுகள் | 1,300 | |
| ஐயக் கடன் ஏற்பாடு – 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி | | 750 |
| கொள்வனவுகள் / விற்பனைகள் | 20,000 | 37,000 |
| காட்சியறை வாடகை | 1,500 | |
| மின்சாரம் | 2,550 | |
| நீர்க் கட்டணம் | 1,500 | |
| சம்பளமும் கூலிகளும் | 3,500 | |
| அலுவலக பராமரிப்புச் செலவுகள் | 1,650 | |
| வங்கி மீதி | 3,700 | |
| காசுக் கையிருப்பு | 1,900 | |
| விளம்பரச் செலவுகள் | 1,100 | |
| 2016 ஏப்ரல் 01 இல் மூலதனம் | | 20,550 |
| | **81,500** | **81,500** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2017 மார்ச் 31 இல் இறுதித் தொக்குகள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டன :

| | ரூ. |
|---|---|
| கிரயத்தில் | 5,400,000 |
| நிகர தேறுகைப் பெறுமதியில் (NRV) | 5,450,000 |

(2) காணியின் பெறுமதி ரூ.4,000,000/-. வியாபாரத்தின் தேய்மானக் கொள்கையானது நேர்கோட்டு முறையில் கிரயத்தில் கீழ்வரும் வீதங்களில் தேய்மானம் செய்தலாகும்:

| | |
|---|---|
| கட்டடம் | ஆண்டிற்கு10% |
| அலுவலக உபகரணம் | ஆண்டிற்கு 20% |
| தளபாட இணைப்புக்கள் | ஆண்டிற்கு 25% |

(3) **ருவான்** என்பவரிடமிருந்து வருமதியாகவுள்ள மீதி ரூ.500,000/- இனை அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்க **நிஷாந்த** தீர்மானித்துள்ளார். 2017 மார்ச் 31 ஆந் திகதி நிலுவையிலிருந்த வியாபார வருமதிகள் மீதிக்கான ஐயக் கடன்களுக்கான பொதுவான ஏற்பாடு 5% ஆகச் செய்யப்பட வேண்டும்.

(4) **NN டிரேடர்ஸ்** வியாபாரத்திற்காக **நிஷாந்த** 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி ஒரு காட்சியறையினை மாதாந்தம் ரூ. 150,000/- வாடகைக்கு பெற்றிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (11 புள்ளிகள்)

(b) 2017 மார்ச் 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்று (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பிரிவு C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |